JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.117/2020
PW.5

| பெயர் | சுப்பையா | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | முருகன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சிதம்பரபேரி | வயது | 57 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்போது சிதம்பராபேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி பழனிச்சாமி என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு போலிசார் எங்கள் ஊருக்கு வந்து கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 23.04.2019 ம் தேதியன்று 12.30 மணிக்கு நானும், சாட்சி பழனிச்சாமி என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே நின்று கொண்டிருந்தபோது சொக்கம்பட்டி காவல் உதவி ஆய்வாளர் சொக்கம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 96/2019 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், பழனிச்சாமியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து

விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi